புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

# வேள்பாரியில் வன்புல மென்புலத் தொழில்மக்கள்

*க. பாரதி*
*ஆய்வியல் நிறைஞர்ப் பட்ட ஆய்வாளர்*
*தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம்*
*கோயம்புத்தூர் - 641 046*

=====================================================================

*ஆய்வுச்சுருக்கம்*

*தமிழ் இலக்கியத்தில் புதின இலக்கிய வகைமை இருபதாம் நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற்றன. புதினங்கள் வரலாற்றுப் புதினங்கள், சமுதாயப் புதினங்கள், மொழிபெயர்ப்பு புதினங்கள் என பல வகைகளைக் கொண்டுள்ளன. அவ்வகையில் சு.வெங்கடேசன் அவர்கள் எழுதிய வரலாற்று புதினமான வேள்பாரியில் இடம்பெறும் வன்புல, மென்புல தொழில்மக்களை இனங்கண்டு அவர்கள் தொழில் செய்யும்முறைகளை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வானது அமைகிறது.*

*ஆய்வு நோக்கம்*

*புதினங்கள் சமகால சமூகத்தின் வெளிப்பாடாக அமைகின்றன. புதின வகைமைகளுள் ஒன்றான வேள்பாரி என்னும் வரலாற்று புதினத்தில் சங்க சமூகத்தின் வாழ்வியல் புனைவுகளுடன் இணைக்கப் பெற்றுள்ளது. அவற்றுள் வன்புல, மென்புல தொழில் மக்கள் பற்றிய தரவுகளை பிரித்தறிந்து ஆராய்வதன் வழி சங்ககால மக்களின் தொழில்சார் வாழ்வியலை அறியமுடியும் என்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.*

*ஆய்வுக் கருதுகோள்*

*வேள்பாரி புதினத்தில் வன்புல மென்புல தொழில்மக்கள் பற்றிய பதிவு காணப்படுகின்றன என்பது இவ்வாய்வின் கருதுகோள் ஆகும்.*

*ஆய்வு அணுகுமுறை*

- *தொகுப்புமுறை ஆய்வு*
- *விளக்கமுறை ஆய்வு*
- *பகுப்புமுறை ஆய்வு*

*முன்னுரை*

*காலந்தோறும் மரபின் வேர் பிடித்து துளிர்விட்டுக்கொண்டே மனித சமுதாயம் வளர் நிலையை அடைய முற்படுகிறது. வளர்ச்சிகளின் உச்சநிலையை அடைந்தாலும் மண்ணில் புதைந்திருக்கும் விதையின் வளர்ச்சியை போன்றதே நம் அறிவின் உச்சம். பறவை செல்லும் வழியில் உதிர்க்கும் விதைகள் போல கேள்விகளை உதிர்க்கும் இடத்தில் புதிய பரிமாணங்கள் பிறக்கின்றன. ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு உள்ளத்து உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளையே பிரதிபலிக்கின்றன. இருபதாம் நூற்றாண்டுகளில் தோன்றிய இலக்கிய வகைகளுள் ஒன்றான புதினங்கள் இன்றளவிலும் சிறப்பான இடம் பெற்று வருகின்றன. நடந்த நிகழ்வுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட வரலாற்று புதினங்கள், கற்பனைகள் கொண்டே மெருகேறிய புனைவியல் புதினங்கள், நடப்பு நிகழ்வுகளைக் கொண்ட எதார்த்த புதினங்கள் என அனைத்தும்*

தனக்கென ஒரு காலச்சூழல் கட்டமைப்பைக் கொண்டுள்ளன. சு.வெங்கடேசன் அவர்கள் எழுதிய வேள்பாரி புதினத்தில் காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப தனக்கான புறக்கட்டமைப்பை மாற்றி அனைத்து தொழில்களும் நவீனமாகிலும் இன்றைய சூழலில் வன்புலம் மற்றும் மென்புலம் சார்ந்த மக்களின் தொழில் முறைகளை விவரிப்பதாக இவ்வாய்வு உருக்கொள்கிறது.

வன்புல மென்புல விளக்கம்

புலம் என்பதற்கு வயல், இடம், திக்கு, மேட்டுநிலம், பொறி, பொறியுணர்வு, அறிவு, கூர்மதி, துப்பு, நூல், வேதம் என தமிழ் அகரமுதலி விளக்கம் தருகின்றது.

நிலம், கல்வி/தொழில் பிரிவு, நுணுகி ஆயும் அறிவு என்பன புலம் என தமிழ் விக்சனரி பொருள் தருகிறது.

புலம் என்பது மக்கள் வாழும் இடங்களின் அமைப்பையும் அவர்களின் தொழில் முறையையும் கொண்டு இவ்வாய்வில் வரையறை செய்யப்படுகிறது.

வன்புலம்

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்"[1]

தொல்காப்பியர் காலம் முதல் நிலங்களை ஐவகையாகப் பிரித்து வகைப்படுத்தும் முறை காணலாகிறது. நிலங்கள் மற்றும் மக்களின் தன்மையை வைத்து வகைப்பாடுகள் அமைகின்றன. கடினமான நிலப்பரப்பினைக் கொண்ட நிலம் வன்புலம் என வழங்கலாகிறது. சங்க இலக்கியம் குறிப்பிடப்படும் கடினமான மலையையும் காடுகளையும் கொண்ட குறிஞ்சியும் முல்லையும் வன்புல நிலங்களாக அறியப்படுகின்றன. அங்குள்ள குறிஞ்சி நிலமக்கள் வெற்பன், குறவன், குறத்தி என்றும் முல்லை நிலமக்கள் தோன்றல், ஆயன், ஆய்ச்சி எனவும் அழைக்கப்படுகின்றனர்.

"கறை அணல் குறும்பூழ் கட்சி சேக்கும்
வன்புலம் இறந்த பின்றை மென் தோல்"[2]

"நெல் மிக்கு
அறை உறு கரும்பின் தீம் சேற்று யாணர்
வருநர் வரையா வளம் வீங்கு இருக்கை
வன்புலம் தழீஇ"[3]

மென்புலம்

"வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்"[4]

சங்க காலம் முதல் செழிப்பு மிக்க நிலமாக மருதமும் நெய்தலும் அறியப்படுகின்றன. மண்ணின் வளமையைக் கொண்டு மருத நிலம் வேளாண்மை மூலம் வளம் கொழிக்கும் பகுதியாக சங்கப் பாடல்கள் குறிக்கின்றன. தமிழகத்தின் வணிகத் தொடர்பு அயல்நாடுகளுடன் இருந்ததென்பதற்கு சான்றாக துறைமுகங்கள் அமைகின்றன. நீர்வழித் தொடர்பிற்கு நெய்தல் நிலம் உகந்ததாக அமைந்ததால் செழிப்புமிக்க மென்புல நிலங்களாக மருதமும் நெய்தலும் அறியலாகின்றன. முல்லை நிலமக்கள் ஊரன், உழவன், உழத்தி என்றும் நெய்தல் நிலமக்கள் சேர்ப்பன், பரதவன், பரத்தி எனவும் அழைக்கப்படுகின்றனர்.

"அம்ம வாழி தோழி நன்றும்
எய்யாமையின் ஏது இல பற்றி
அன்பு இலன் மன்ற பெரிதே
மென்புல கொண்கன் வாராதோனே"[5]

"மென்புலத்து வயல் உழவர்
வன்புலத்துப் பகடுவிட்டு"[6]

வன்புலம்

வேள்பாரி புதினத்தில் குறிப்பிடப்படும் குறிஞ்சி நில வன்புல மக்கள் வேட்டைத்தொழில், கிழங்கு அகழ்தல், தினைப்புலம் காத்தல், ஆய்ச்சியர் வெண்ணெய் விற்றல்,

மருத்துவம், ஆயுதங்களை உருவாக்கும் முறை போன்றவை கீழ்கண்ட வகையில் விவரிக்கப்பட்டுள்ளது.

வேட்டைத்தொழில்

வன்புல நிலப் பகுதியின் மக்களின் இன்றியமையாத தொழிலாக வேட்டையாடுதல் காணப்படுகின்றது. அறுபதாங்கோழி வேட்டை, காட்டெருமையினை வீழ்த்தி மணமுடித்தல் வேட்டையாடிய பேரெலியைக் கொண்டு போர்வை செய்தல் போன்ற செய்திகள் காணப்படுகின்றன. அத்தொழிலினை செய்பவர்களாக பறம்பு நாட்டின் இனக்குழு மக்கள் காணலாகின்றனர்.

“பேரெலி உயரமான கரும்பாறை இடுக்குகளில் தான் இருக்கும் இளைஞர்கள் மிக விரைந்து செயல்பட்டால் தான் அதை பிடிக்க முடியும்.”

கிழங்கு அகழ்தல்

காட்டில் விளைந்த கிழங்கை எடுக்கும் பொழுது வள்ளிக் கிழங்கின் குழியில் கொடிக்குலத்தின் பெண்மகளான வள்ளி பிறந்தாள் என்ற கூற்று இடம் பெறுகிறது. “சோமக்கிழவி காட்டுக்கு கிழங்கு தேடி போயிருக்கிறாள்” உணவின் தேவைக்கு கிழங்குகளை எடுத்தலை மலைமக்கள் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

தினைபுலம் காத்தல்

மலைமக்களின் வேளாண்முறை என்பது சமதளப் பகுதியினின்று மாறுபடுவதால் காட்டுவிலங்குகளிடம் இருந்து அவற்றை பாதுகாக்கும் பொறுப்பு இனக்குழுக்களின் இளைஞர், இளைஞியரிடம் ஒப்படைக்கப்படுகிறது. இத்தொழில் முறை வன்புல மக்களின் தொழில்களில் சிறப்பிடம் பெறுகிறது. “அவள் தினைப்புலம் காத்து வீடு திரும்பும் வழியில் அருவி கடந்து சிறிது தூரத்தில் சரக்கொன்றை மரம் ஒன்று இருக்கிறது.”

மருத்துவர்கள்

காடும் மலையும் சார்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் தங்களின் பாதுகாப்பை வலுப்படுத்த தாவரங்களின் இயல்பை அறிந்து வைத்திருக்கும் மதி நுட்பம் உடையவர்களாக காணப்படுவர். பறம்பு நாடு 300 ஊர்களைக் கொண்டதாகும். அவ்வூர்களில் வாழும் மக்கள் அனைவருமே மிகுந்த மருத்துவ நுட்பங்களை அறிந்திருந்தனர் என்பதை ஆசிரியர் கீழ்க்காண் வகைகளில் வெளிப்படுத்துகிறார்.

“பிரண்டையின் மேல் சிரட்டையை நன்றாக தேய்த்து காய வைக்க வேண்டும். பின்னர் சிரட்டையை பக்குவமான நெருப்பிலே வைத்தால் சிரட்டை எரியாது உள்ளே இருக்கும் நீர் தான் கொதிக்கும்.”

“ஆட்கொல்லி மரத்திற்கான மருத்துவமாக சேராங்கொட்டை விதையுடன் மூன்று விதமான மூலிகைகளை சேர்த்து உடல் முழுவதும் பூசிக் கொண்டால் மரத்தின் அருகில் போய் வரலாம்.”

திசைவேழரின் வளைந்த கால்களை சரி செய்ய ‘புலி முன் ஆடு’ என்னும் மருத்துவக் குறிப்பை பயன்படுத்துவதன் மூலம் நோயின் தன்மைகளை எளிதில் கண்டடைந்து குணப்படுத்தும் ஆற்றல் மிக்கவர்களாக மலை மக்கள் திகழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது.

ஆய்ச்சியர் (வெண்ணெய் விற்றல்)

கொற்றவைக்கூத்தில் இடம்பெறும் செம்பாதேவியின் கதை மூலம் ஆய்ச்சியர் குல மக்கள் பற்றிய செய்திகளை அறிய முடிகின்றது. இவர்கள் வசிக்கும் பகுதி கோலநாடு என அறியலாகிறது. மாடுகளை எந்த விதத்திலும் துன்புறுத்துதல் கூடாது என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது. பல குழுக்களின் கிடை மாடுகள் இருந்ததால் அவற்றை அடையாளம் காண வண்ணக் கற்கள் கொண்டு நெற்றியில் பட்டம் கட்டினர். “பக்கத்தில் இருக்கும் ஊருக்கு வெண்ணெய் விற்க போனால் செண்பா. வெண்ணெய் விற்று தானியம் பெற்று வருவது பெண்களின் வேலை. உழவு செழிப்பாக நடந்து கொண்டிருந்த ஊர் அது. இரு தெருக்களை தாண்டும் முன்பே அவள் கொண்டு வந்த வெண்ணை விற்றுத் தீர்ந்தது.” வன்புலமான முல்லை

நிலத்தில் செய்யப்படும் வெண்ணெய் மருத நிலத்தில் விற்கப்படுகிறது. இதன் மூலம் முல்லை நிலத்தொழில் முறை அறிய முடிகிறது.

வன்புல ஆயுதத் தொழிற்சாலை

ஆயுதங்கள் என்பவை போரில் எதிரியை வீழ்த்துவதற்கு மட்டுமின்றி மனிதன் தன்னை தற்காத்துக் கொள்ளவும் தேவைப்படும் ஒன்றாக வன்புல அமைப்பில் காணப்படுகிறது. இயற்கை அறிவு நுட்பம் மிக்கவர்கள் தனித்த ஆயுதங்களைக் கையாளுவதில்லை. ஏனெனில் இயற்கையே அவர்களுக்கு ஆயுதமாக அமைகின்றன. மலைமக்கள் தங்களின் ஆயுதங்களில் ஈட்டியையும், வேல்முனையையும் இரும்பு கொண்டு உருவாக்குகின்றனர். மற்றைய ஆயுதங்களெல்லாம் பெரும்பாலும் இயற்கையில் கிடைக்கும் மரங்கள், விலங்குகளின் உறுப்புகள் கொண்டு தயாரிக்கப்படுகின்றன.

“நாம் இரும்பினை வைத்து தான் ஈட்டியையும் வேல்முனையையும் உருவாக்குகிறோம். ஆனால் அவற்றை திருகி முறுக்க முடிவதில்லை...... பறம்பின் ஆயுதப் பணியாளர்கள் அதற்காக இரவு பகலாய் உழைத்தனர். சிறுபாழி நகரில் அமைந்த தொழிற் கூடங்கள் வெவ்வேறு வகைகளில் வடிவ மாற்றம் அடைந்தன. நெருப்பு எரியும் முறை, தாதுக்களை நெருப்பிலிட்டு எரிப்பதற்கான நீர் வடிவத் தொட்டி, பக்கச்சுவர், ஊதுந்துருத்தி என எல்லாம் வெவ்வேறு வடிவங்களாக மாற்றமடையத் தொடங்கின.

பாரியின் மன உறவினை ஏற்ற பொதினிமலை மக்கள் ஆயுதங்களைக் கூர்மையாக்கும் சாணைக்கல் வியப்பிற்குரியது. கல்லில் ஆயுதத்தை உரசுவதன் மூலம் அதை கூர்மையாக்கும் செயல்முறையை பொதினிமலை மக்கள் செய்து வந்தனர்.

“அதனை எடுத்து அரக்கு கலந்து ஒரு உருளையாக மாற்றி காய ஒரு வாரம் ஆகும்.”

“உலோகத்தால் வில் செய்யும் பழக்கம் பறம்பில் இல்லை”

மென்புலம்

செழிப்புமிக்க நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் தொழில்களாக வேளாண்மை, கட்டிடக்கலை, மரத்தச்சர்கள், பொற்கொல்லர்கள், ஆயுதத் தயாரிப்பு பணியாளர்கள், வணிகர்கள் ஆகியோரின் தொழில்முறையை விளக்குவதாக கீழ்காண்வன அமைகின்றன.

வேளாண்மை

வேளாண்மையில் சிறந்து செழிப்புற்று விளங்கிய நிலம், மருதம் என்பது அனைவரும் அறிந்ததே. அவ்வகை நிலத்தில் எந்த முறையில் பயிர் செய்தனர் அகுதையின் குலத்தோன்றல்கள் என்றும் அவர்களின் வேளாண்மை சார் நுணுக்கங்களும் புதினத்தில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

“எல்லோரும் காட்டை அழித்து விளை நிலம் ஆக்கிய போது காட்டை அறிந்துகொண்டு நிலத்தை விளைய வைத்தவர்கள் அவர்கள். பன்றி அகழ்ந்த நிலத்தில் பயிரிட்ட மலை அனுபவம்தான் சமதளத்தில் பயிரிடும் முன் மண்ணை ஏர் கொண்டு கிளறச் சொல்லியது.”

“வண்டல் மண்ணுக்கு, இறுகிய மண்ணுக்கு, இள மண்ணுக்கு என உழுப்படைகள் வகைப்படுத்தி உருவாக்கினர். தாளி மரமும் வேலா மரமும் வெக்காளி மரமும் கொண்டு கலப்பை செய்து மண்ணின் தன்மைக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்தினர்.”

கட்டிடக்கலை

மருதநில நாட்டு மக்கள் கட்டிடக்கலையில் சிறப்புற்று விளங்கினர். சுவர்கள், தூண்கள், கதவு, ஜன்னல், வெற்றுக் கட்டிடக்கல், வலுவூக்கிச்சுவர்கள், வெளிச்சுவர்களில் ஈரக்கசிவுகளை தடுத்தல், கட்டிடங்களுக்குச் சில காப்புக் கட்டுமானங்கள் அமைத்தல் மிகவும் அவசியம். கட்டிடங்களைக் கட்டுவதற்காகவும் கட்டிடங்களை மறுசீரமைப்பதற்காகவும் குறுநில மன்னர்களின் ஆட்சியின் கீழிருக்கும் மக்கள் பேரரசின் கட்டளைக்கிணங்க பணியமர்த்தப்படுகின்றனர் என்பதற்கு சான்றாக இவை அமைகின்றன.

“சரிபாதி மலை வளத்தையும் மீதிபாதி மருதநிலத்தையும் கொண்டது..... அதனாலே வெங்கல்நாடு செழிப்புற்று விளங்கிற்று.”

“மரவேலைப்பாடுகளும் மண்வேலைபாடுகளும் செய்யும் எண்ணற்ற கலைஞர்கள் இங்குள்ளனர். கட்டடங்கள் கட்டியெழுப்பும் கொற்றர்களுக்கு இது தாய்நிலம்”

*தச்சர்கள்*

*மதுரையை அடுத்துள்ள அருகன்குடி என்னும் ஊரில் வாழும் மக்கள் துறைமுகங்கள் அமைந்த பகுதியின் பணிகளான கலங்களை செப்பணிடுதல், பொருள்களை ஏற்றுமதி செய்தல் போன்றவைகளைச் செய்தனர். மருதமும் நெய்தலும் சேர்ந்த நிலப் பகுதியில் இத்தகைய தொழில் முறைகள் காணப்படுகின்றன.*

*"கலங்களை சரி செய்யும் திறன் வாய்ந்த தச்சர்களின் பணிகள் முடிந்த பின் பொருள்களை ஏற்றும் பணி தொடங்கியது"*

*பொற்கொல்லர்கள்*

*அரசிற்கு வணிகத்தின் மூலம் கிடைக்கும் பொருட்கள் பெரும்பாலும் பொன்னாக அமைவதாலும் அலங்காரங்களில் மக்கள் விருப்பம் கொண்டவர்களாக இருப்பதாலும் பொற்கொல்வர்கள் மென்புல நிலப்பரப்பில் விரவிக் காணப்பட்டனர். அரண்மனைகள் உள்ள பகுதியெங்கும் பொற்கொல்லர்கள் காணப்பட்டனர்.*

*"இந்தத் திருமணத்தை முன்னிட்டு எம் அரசர் பொன்நாணயம் ஒன்றை வெளியிட்டுள்ளார்."*

*படைக்கலப் பேரரங்கு*

*நிலத்தின் தன்மையை பொறுத்து போரில் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் மாறுபடுகின்றன. மலைமக்களின் ஆயுதங்களில் ஒரு சிலவன மட்டுமே இரும்பால் செய்யப்படுகின்றன மற்றையன யாவும் பெரும்பாலும் மரங்களால் செய்யப்படுகின்றன. ஆனால் மென்புல பகுதியில் அவை தலைகீழ் மாற்றமடைகின்றன.*

*"இருபது வகையான வாள்கள், எட்டு வகையான வேல்கள், மூன்று வகையான குறுவால்கள் மூன்று வகையான தண்டங்கள்"*

*"கடைசி வரை இருப்பு குறையாமல் எப்படி சமாளிப்பது உலைக்கலத்திலிருந்து தேவையான ஆயுதங்களை எப்படி விரைவுப்படுத்தி வாங்குவது ஆகியவற்றில் மிகுந்த கவனத்தோடு செயல்படுபவராக ஆயுதவாரிகள் இருந்தனர்."*

*வணிகம்*

*மூவேந்தர்களிடையே போட்டியும் வணிகத்தின் பொருட்டே ஏற்படுகிறது. ஐவகை நிலத்திலும் வணிகம் இடையராது நடைபெற்றுக் கொண்டே தான் இருந்தது. எனினும் செழுமை மிக்க நிலப்பரப்பில் வணிகமே முக்கிய தொழிலாகக் கருதப்பட்டது. தேவைக்கு பொருட்களை மாற்றிக் கொள்ளும் பழக்கம் விடுத்து அனைவரிலும் செல்வம் மிக்கவராகவும் பெருமையுடையவராகவும் வெளிப்படுத்திக் கொள்ள வணிகம் மென்புலப் பகுதியில் ஒரு கருவியாகப் பயன்பட்டது.*

*"வணிகம் தானே ஓர் அரசின் அச்சாணி? வணிகம் செழித்தால் தானே அரசு செழிக்கும்? அரசு செழித்தால்தானே மக்கள் செழிப்பர்?"*

*முடிவுரை*

*வன்புல நிலப்பகுதி மக்களின் இன்றியமையாதத் தொழிலாக வேட்டையாடுதல், அறுபதாங்கோழி வேட்டை, காட்டெருமையினை வீழ்த்தி மணமுடித்தல், உணவின் தேவைக்கு கிழங்குகளை எடுத்தல் மலைமக்கள் தொழிலாகக் கொண்டனர். காட்டுவிலங்குகளிடம் இருந்து தினைபுலத்தை பாதுகாக்கும் பொறுப்பு இனக்குழுக்களின் இளைஞர், இளைஞியரிடம் ஒப்படைக்கப்படுகிறது. தங்களின் பாதுகாப்பை வலுப்படுத்த தாவரங்களின் இயல்பை அறிந்து வைத்திருக்கும் மருத்துவ மதிநுட்பம் உடையவர்களாக மலைமக்கள் விளங்குகின்றனர். தங்களின் ஆயுதங்களில் ஈட்டியையும், வேல்முனையையும் இரும்பு கொண்டு உருவாக்குகின்றனர். மற்ற பிற ஆயுதங்களெல்லாம் பெரும்பாலும் இயற்கையில் கிடைக்கும் மரங்கள், விலங்குகளின் உறுப்புகள் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. வணிகத்தின் மூலம் கிடைக்கும் பொருட்கள் பெரும்பாலும் பொன்னாக அமைவதாலும் அலங்காரங்களில் மக்கள் விருப்பம் கொண்டவர்களாக இருப்பதாலும் பொற்கொல்லர்கள் மென்புல நிலப்பரப்பில் விரவிக் காணப்பட்டனர்.*

*ஓர் இனக்குழு சமூகம் தனது வளர்ச்சி நிலையை அடைய முற்படும்போது பல்வேறு மாறுதல்களைக் கொண்டமையும். அத்தகைய மாற்றாமானது நிலம்சார் மக்களின் வாழ்க்கைமுறையையும் மாற்றும் வல்லமை கொண்டது.*


மேற்கோள்

*1. தமிழண்ணல் (உ.ஆ)., தொல்காப்பியம், நூ.எ. 951, ப. 292*

*2. ஞா. மாணிக்கவாசகன், பெரும்பாணாற்றுப்படை, பா.வரி. 201 - 206, ப. 146*

*3. முனைவர் ஆ. பரிமணம், பதிற்றுப்பத்து, பா. எ. 75, ப. 269*

*4. தமிழண்ணல் (உ.ஆ)., தொல்காப்பியம், நூ.எ. 951, ப. 292*

*5. முனைவர் அ. ர. சிங்காரவடிவேலன், ஐங்குறுநூறு, பா. 119, ப. 156*

*6. புலவர் ரா. இளங்குமரன், புறநானூறு, பா. 395, ப. 567*


********* ********* ********** ********* ********* ********** ********** **********